## 12th Geography Lesson 6 Questions in Tamil

## 6] புவித் தகவலியல்

1) புவித் தகவலியல் என்பது கீழ்க்கண்ட எதனுடன் தொடர்புடைய ஒரு பாடப்பிரிவு அல்ல?

A) உலகளாவிய ஊடுருவல் செயற்கைக்கோள் அமைப்பு (GNSS)

B) தொலை நுண்ணுணர்வு

C) புவித்தகவல் தொகுப்பு (GIS)

D) புகைப்படக்கருவி

2) புவித் தகவலியல் என்பது கீழ்க்கண்ட எதை/எவற்றை மேற்கொள்வதில் முக்கியப் பங்காற்றுகிறது?

I. நில அளவாய்வு

II. போக்குவரத்து

III. நீரியல்

IV. பேரிடர் மேலாண்மை

A) 1 மட்டும்

B) 1 மற்றும் 2 மட்டும்

C) 1, 2 மற்றும் 3

D) மேற்கண்ட அனைத்தும்

3) தொலை நுண்ணுணர்வின் மின்காந்த கதிர்வீச்சை இலக்கு நோக்கி செலுத்த ஆற்றலை அளிப்பது கீழ்க்கண்டவற்றுள் எது?

A) மின்சாரம்

B) எரிபொருள்

C) பேட்டரிகள்

D) சூரியன்

4) தொலை நுண்ணுர்வு என்பது கீழ்க்கண்ட எதைப் பற்றிய தகவல்களை ஒருங்கிணைக்கும் தொழில் நுட்பமாகும்?

A) கோள்கள்

B) விண்வெளி பொருட்கள்

C) புவிசார் பொருட்கள்

D) சூரியன்

5) தொலை நுண்ணுணர்வியின் முக்கியத் தேவை கீழ்க்கண்டவற்றுள் எது?

A) புவியால் பிரதிப்பலிக்கப்படும் சூரிய ஆற்றலை புகைப்படக் கருவிகள் மூலம் பதிவு செய்தல்

B) மினகாந்த கதிர்வீச்சை இலக்கு நோக்கி செலுத்துவதாகும்.

C) சூரிய ஆற்றலை பெற்று புவிக்கு பிரதிபலித்தல்

D) புவியால் பிரதிப்பலிக்கப்படும் சூரிய ஆற்றலை படச்சுருள்கள் மூலம் பதிவு செய்தல்

6) கீழ்க்கண்டவற்றுள் தொலை நுண்ணுணர்வுடன் தொடர்பில்லாதது எது?

A) வான்வெளிப்புகைப்படம்

B) வெப்பம்

C) புவிப்படவியல்

D) ரேடார்

7) மின் காந்த கதிர்வீச்சு வாயு மூலக்கூறுகளின் மூலம் வளிமண்டலம் ஈர்ப்பதை குறிப்பது கீழ்க்கண்டவற்றுள் எது?

A) சிதறடிப்பு

B) உட்கிரகிப்பு

C) ஒளி விலகல்

D) ஒளி ஈர்ப்பு

8) ஒளிச்சிதறல் என்பது கீழ்க்கண்ட எது/எவையால் மின்காந்த ஆற்றல் திருப்பி அனுப்பபடுவதாகும்?

A) வளிமண்டலத்தில் உள்ள துகள்களால்

B) வளிமண்டல காற்று மூலக்கூறுகளால்

C) வளிமண்டல துகள்கள் மற்றும் வளிமண்டல காற்று மூலக்கூறுகள்

D) இவற்றில் எதுவுமில்லை

9) ஒளிச்சிதறலின் அளவானது வளிமண்டலத்தில் உள்ள எதை/எவற்றைச் சார்ந்திருக்கும்?

A) துகள்களின் பருமன்

B) வாயுக்களின் அடர்த்தி

C) A மற்றும் B

D) எதுவுமில்லை

10) புவித்தகவல் தொகுப்புடன் தொடர்புடைய கூறுகளில் பொருந்தாததைத் தேர்க

A) கைப்பேசி கண்காணிப்பு

B) கணிணி

C) இணையம்

D) புவிப்படவியல்

11) புவியினால் திருப்பி அனுப்பட்ட மின்காந்த கதிர்வீச்சைச் சேகரிக்கவும் பதிவு செய்யவும் தேவைப்படுவது?

A) உணர்வி

B) ஜி.பீ.ஆர்

C) புகைப்படக் கருவி

D) கைப்பேசி

12) உணர்வியினால் பதிவு செய்யப்பட்ட ஆற்றலானது எந்த வடிவில் புவிக்கு செலுத்தப்படுகிறது?

A) அலை வடிவில்

B) மின்னனு வடிவில்

C) ஒளி வடிவில்

D) ரகசிய கோடு வடிவில்

13) கூற்று: அனைத்து இடம்சார் தரவுகளையும் தெளிவாக உணர்வி தருகிறது.

காரணம்: உணர்வியானது அலைநீளக் கதிர்வீச்சுகளையும் பதிவு செய்யும் திறன் பெற்றது.

A) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

B) கூற்று சரி, காரணம் தவறு

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம கூற்றை விளக்கவில்லை.

14) மின்காந்த கதிர்வீச்சு மூலத்தின் அடிப்படையில் உணர்வி எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகிறது?

A) 4

B) 3

C) 2

D) 5

15) சக்தியினை தானாகவே உற்பத்தி செய்து இலக்குகளை ஒளியூட்டி, பிரதிபலிக்கப்பட்ட சக்தியை பதியும் உணர்வி எது?

A) உயிர்ப்பற்ற உணர்வி

B) உயிர்புள்ள உணர்வி

C) அலை நீள உணர்வி

D) மின் காந்த உணர்வி

16) உயிர்ப்புள்ள உணர்வியின் அலைநீளம் எத்தனை மில்லி மீட்டருக்கும் அதிகமாக அளவிடப்படுகிறது?

A) 4

B) 3

C) 2

D) 1

17) பதிம முறைப்படுத்தல் எத்தனை வகைப்படும்?

A) 2

B) 4

C) 3

D) 1

18) எந்த முறையில் ஒவ்வொரு அலைக்கற்றையிலும் உள்ள படப்புள்ளிகள் தனித்தனியே சீரமைக்கப்படுகிறது?

A) பதிம மேம்பாடு

B) பதிம மீட்பு

C) தகவல் ஈட்டல்

D) விவரணம் மற்றும் ஆய்வு

19) பதிமத்தில் மாறுதல் செய்து அவற்றை பார்ப்பவரின் மீதான பதிம தாக்கத்தை மாற்றியமைப்பது?

A) பதிம மேம்பாடு

B) பதிம மீட்பு

C) தகவல் ஈட்டல்

D) விவரணம் மற்றும் ஆய்வு

20) விவரணம் செய்தலின் முக்கிய நோக்கம்?

A) சுற்றுச்சூழலுக்கும் கலாச்சாரக் காரணிகளுக்கும் இடையேயான தொடர்பை வெளிக்கொணர்தல்

B) பதிமத்தில் உள்ள தகவல்களை அறிதல்

C) சுற்றுச்சூழல் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்தல்

D) கலாச்சார காரணிகளை ஆய்தல்

21) பதிமத்தின் தரம் கீழ்க்கண்ட எதைப் பொறுத்து அமைவதில்லை?

A) உணர்வியின் தன்மை

B) படம் எடுக்கப்படும் பருவம் மற்றும் நாளின் நேரம்

C) வளிமண்டல விளைவுகள்

D) மின்காந்த கதிர்வீச்சின் தன்மை

22) மின்காந்த கதிர்வீச்சு மூலத்தின் அடிப்படையில் தொலை நுண்ணுணர்வு எத்தனை வகைப்படும்?

A) 4

B) 2

C) 3

D) 1

23) சரியான கூற்றை காண்க:

1. சாதாரண புகைப்படக் கருவி உயிர்புள்ள தொலையுணர்வு போன்றது.

2. செயற்கை ஒளியூட்டி கொண்ட புகைப்படக் கருவி மூலம் படமெடுத்தல் உயிர்ப்பற்ற தொலையுணர்வை ஒத்தது

3. உயிர்ப்புள்ள தொலை நுண்ணுணர்வு சுயசக்தியின் மூலம் பொருட்கள் ஒளியூட்டப்பட்டு பிரதிபலிக்கும் சக்தியை பதிவு செய்யக்கூடியதாகும்

4. உயிர்ப்பற்ற தொலையுணர்வு நுண்ணலை மின்காந்த நிறைமலை மூலம் செயல்படும்

A) 1 மட்டும்

B) 1 மற்றும் 2

C) 3 மற்றும் 4

D) 3 மட்டும்

24) உயிர்ப்புள்ள மற்றும் உயிர்ப்பற்ற தெலை நுண்ணுணர்வின் அலைநீளம் முறையே?

A) 1 மி.மீக்கு அதிகமாகவும், 0.4 மி.மீ வரையிலும் உள்ளது

B) 1 மி.மீ வரையிலும், 0.4 மி.மீக்கு அதிகமாகவும் உள்ளது

C) 0.4 மி.மீக்கு அதிகமாகவும், 1 மி.மீ வரையிலும் உள்ளது

D) 0.4 மி.மீ வரையிலும், 1 மி.மீக்கு அதிகமாகவும் உள்ளது

25) கூற்று: உயிர்ப்பற்ற உணர்விகள் பகல் நேரங்களில் மட்டுமே தகவல்களை சேகரிக்கும்

காரணம்: உயிர்ப்பற்ற உணர்விகள் சூரியனிடமிருந்து மட்டுமே ஆற்றலை பெற்று இயங்கும்

A) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

B) கூற்று சரி, காரணம் தவறு

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

26) கீழ்க்கண்டவற்றுள் எது/எவை சரியானவை?

I. நுண்ணலை மின்காந்த நிறமலை மூலம் செயல்படுவது – உயிர்ப்பற்ற தொலைநுண்ணுணர்வு

II. அகச்சிவப்பு மற்றும் புலப்படும் கதிர்வீச்சு மூலம் செயல்படுவது –

உயிர்ப்புள்ள தொலைநுண்ணுணர்வு

III. ஒளிரும் உணர்வி மற்றும் செயற்கை துவார ரேடார் – உயிர்ப்புள்ள உணர்வி

IV. சூரிய சக்தியின் மூலம் மட்டுமே இயங்குவது – உயிர்ப்பற்ற உணர்வி

A) 1 மற்றும் 2
B) 3 மற்றும் 4
C) 1 மற்றும் 3
D) 2 மற்றும் 4

27) இந்தியாவின் IRNSS–ன் வேறுபெயர் என்ன?
A) IRNSS–1A
B) IRNSS–1B
C) NavIC
D) IRNSS–1C

28) தொலை நுண்ணுணர்வு மேடைகள் எத்தனை வகைப்படும்?
A) 2
B) 3
C) 4
D) 5

29) எவ்வகை தொலை நுண்ணுணர்வு மேடை, மற்ற நடைமேடைகளின் வாயிலாக சேகரிக்கப்படும் தகவல்களைவிட விரிவான தகவல்களை தரவல்லது?
A) நிலமேடை
B) வான்வெளி மேடை
C) விண்வெளி மேடை
D) அனைத்தும்

30) நிலையான நில மேடைகள் எதன் தன்மையை கண்டறியும் புவிபரப்பு தோற்றங்களில் நெடுங்கால கண்காணிப்பிற்கு பயன்படுத்தப்படுகிறது?
A) இயற்கை
B) கடல்
C) சூரியக் கதிர்வீச்சு
D) வளிமண்டலம்

31) வான்வெளி மேடை என்பது என்ன?
A) இலக்கு தொடர்பான தகவல்களை சேகரிக்கப் பயன்படும் புகைப்படக் கருவி மற்றும் உணர்வி போன்றவை மண்ணில் நிலைநிறுத்தப்படும் இடம்.
B) வான்வெளிப் புகைப்படங்கள் எடுக்கவும், புகைப்படத்தை அளவீடு செய்யவும் வான்வெளியில் அமைக்கப்படும் தொலைநுண்ணுணர்வு மேடை.
C) வான்வெளிப் புகைப்படம் எடுக்க, புவியின் சுற்றுப் பாதையில் அமைக்கப்படும் தொலைநுண்ணர்வு மேடை.
D) வளிமண்டல ஆய்விற்காக கடலடியில் அமைக்கப்படும் தொலைநுண்ணுணர்வு மேடை.

32) வான்வெளி தொலை நுண்ணுணர்வின் வகைகள் எத்தனை?
A) 4
B) 3
C) 2
D) 5

33) வான்வெளியிலான முதல் புவிநிலத்தோற்ற அமைப்பு பலூனில் பொறுத்தப்பட்ட கேமரா மூலம் எந்த ஆண்டு எடுக்கப்பட்டது?
A) 1855
B) 1858
C) 1859
D) 1860

34) ட்ரோன்களின் சிறப்பம்சம் என்ன?
A) மலிவான மேடை, நெடுந்தூர பயணம், மிதமான தாங்கும் திறன் மற்றும் ஓடுபாதையின்றி செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
B) புகைப்படம் எடுத்தல், அகச்சிவப்பு கதிரின் தன்மை கண்டறிதல் ரேடார் கண்காணிப்பு மற்றும் தொலைக்காட்சி கண்காணிப்பு
C) உணர்வி மற்றும் பிறக் கருவிகள் மூலம் பெறப்படும் தகவல்களை சேமித்து வைக்கும் திறன் கொண்டது.
D) தகவல் தேவைப்படும் புவிப்பரப்பிற்கு மேலே பறந்து இரவு பகலாக தரவுகளை தரும் திறன் கொண்டது.

35) ட்ரோன்கள் பற்றிய தவறான கூற்றை தேர்க.
A) ட்ரோன்கள் நெடுந்தூரம் பயணிக்கக் கூடிய மற்றும் ஓடுபாதையின்றி செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஓர் வானூர்தி
B) இவை புகைப்படம் எடுப்பதற்கு மட்டுமின்றி விவசாய நிலத்திற்கு மருந்து தெளித்தல், அணுகுண்டு வீச்சு போன்றவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.
C) ட்ரோன்கள் ரேடார் கண்காணிப்பு மற்றும் தொலைக்காட்சி கண்காணிப்பு போன்ற பணிகளை செய்யும் திறன் கொண்டது
D) ட்ரோன்கள், இராணுவ மற்றும் அரசியல் சார்ந்த தகவல்களுக்கு புவியைச் சுற்றி வரும் கண்காணிப்பு மேடைகளாகப் பயன்படுகிறது.

36) உலகின் முதல் வான்வெளி புகைப்படத்தை எடுத்தவர் யார்?
A) நடார்
B) கஸ்பர் ஃபெலிக்ஸ் டூர்னகோன்
C) A மற்றும் B
D) எவருமில்லை

37) பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
1. உயரம் குறைவான பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் புவிப்பரப்பின் விரிவான விவரங்களை தரவல்ல பெரிய அளவை புகைப்படத்தை தரவல்லது.
2. உயரம் அதிகமுள்ள இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் குறைந்த பரப்புசார் பகுதிறன் கொண்ட சிறிய அளவை புகைப்பட்டங்களை தரவல்லது.
A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) 1 மற்றும் 2 சரி
D) 1 மற்றும் 2 தவறு

38) விண்வெளி தொலைநுண்ணுணர்விற்கு எவை பயன்படுத்தப்படுகின்றன?
A) செயற்கைகோள்
B) ஏவுகணை
C) ட்ரோன்கள்
D) பலூன்
39) புவியைச் சுற்றிவரும் எவை விண்வெளி மேடைகளாக பயன்படுத்தப்படுகிறது?
A) கோள்கள்
B) விண்கலன்கள்
C) செயற்கைக்கோள்
D) சந்திரன்
40) விண்வெளி தொலைநுண்ணுணர்வு பற்றிய தவறான கூற்று எது?
A) பெரும் பரப்பை உள்ளடக்கிய தகவல்
B) தேவைப்படும் இடத்தகவல்களை குறிப்பிட்ட இடைவெளியில் அடிக்கடி அளித்தல்
C) கதிர் வீச்சளவிய கொண்ட உணர்விகள் மூலம் நிலத்தோற்றங்களின் அளவு சார் தகவலை அளித்தல்
D) முழுமையாக தானியங்கி கணினி மயமாக்கப்பட்ட செய்முறை பகுப்பாய்வை உடையது.
41) செயற்கைகோள்களின் சுற்று வட்டப்பாதைகள் எதன் அடிப்படையில் வடிவமைக்கப்படுகின்றன?
A) உணர்வியின் செயல்படும் திறன்
B) செயற்கைக்கோளுடன் பொருத்தப்பட்ட கணினியின் தரவு சேமிக்கப்படும் திறன்
C) செயற்கைக்கோளின் நோக்கம்
D) A மற்றும் C
42) செயற்கைக்கோள்களை எத்தனையாக வகைப்படுத்தலாம்?
A) 3
B) 4
C) 5
D) 6
43) புவிநிலை செயற்கைகோள்கள் எந்தத் திசையில் சுற்றும்?
A) கிழக்கிலிருந்து மேற்காக
B) மேற்கிலிருந்து கிழக்காக
C) வடக்கிலிருந்து தெற்காக
D) தெற்கிலிருந்து வடக்காக
44) புவிநிலை செயற்கைக் கோள்கள் எங்கு, எவ்வளவு உயரத்தில் நிலைநிறுத்தப்படுகிறது?
A) துருவப்பகுதியில் 35000 கி.மீ உயரத்தில்
B) நிலநடுக்கோட்டுப்பகுதியில் 35000 கி.மீ உயரத்தில்
C) துருவப் பகுதியில் 1000 கி.மீ உயரத்தில்
D) சூரியநிலையில் 200 கி.மீ உயரத்தில்
45) புவிநிலை செயற்கைகோளின் படம்பிடிக்கும் பரப்பளவு என்ன?
A) 700 வடக்கு முதல் 700 தென் அட்சம் வரை
B) 700 கிழக்கு முதல் 700 மேற்கு தீர்க்கம் வரை
C) 660 30' வடக்கு முதல் 660 30' தென் அட்சம் வரை
D) 900 வடக்கு முதல் 900 தென் அட்சம் வரை
46) பொருந்தாத ஒன்றை தேர்க
A) GOES
B) METEO SAT
C) INTEL SAT & INSAT
D) SPOT
47) இந்தியாவின் முதல் புவிநிலைச் செயற்கைக்கோள் எது?
A) INSAT
B) APPLE
C) METEO SAT
D) GEOS
48) மாட்டு வண்டியில் வைத்து சோதனையிடப்பட்ட புவி நிலை செயற்கைக்கோள் எது மற்றும் அது எந்த நாட்டுடையது?
A) INSAT, இந்தியா
B) IRNSS, இந்தியா
C) APPLE, இந்தியா
D) BeiDou, இந்தியா
49) தன் முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தை சென்றடைந்த ஒரே நாடு எது?
A) இந்தியா
B) சீனா
C) அமெரிக்கா
D) ஜப்பான்
50) அனைத்து புவிவள செயற்கைகோள்களும் எவ்வகையைச் சார்ந்தவை?
A) புவிநிலை செயற்கைக்கோள்
B) சூரிய நிலை செயற்கைகோள்
C) உளவுச் செயற்கைக்கோள்
D) B & C
51) துருவ செயற்கைக்கோள்களின் எந்த அமைவிடம் புவி புவிச்சுழலாமல் இருந்தால் கூட மாறாமல் இருக்கும்?
A) வடக்கு–தெற்கு அமைவிடம்
B) கிழக்கு–மேற்கு அமைவிடம்
C) வடகிழக்கு–தென்மேற்கு அமைவிடம்
D) வடமேற்கு–தென்கிழக்கு அமைவிடம்
52) தவறான இணையைத் தேர்க.
A) METEO SAT – புவிநிலை செயற்கைக் கோள்
B) LAND SAT – துருவநிலை செயற்கைக்கோள்
C) NOAA – சூரியநிலை செயற்கைக்கோள்
D) சால்ட் I – துருவநிலை செயற்கைக் கோள்
53) சரியான இணையைத் தேர்க
A) துருவச் சுற்றுப்பாதை – 100–200 கி.மீ உயரம்
B) சூரியநிலை சுற்றுப்பாதை – 35,800 கி.மீ உயரம்

C) புவிநிலை சுற்றுப்பாதை – 200 – 1,000 கி.மீ உயரம்

D) துருவச் சுற்றுப்பாதை – 200 – 1,000 கி.மீ உயரம்

54) இராணுவ மற்றும் அரசியல் சார்ந்த தகவல்களுக்காக புவியைச் சுற்றி வரும் கண்காணிப்பு மேடைகள் எவை?

A) புவிநிலை செயற்கைக்கோள்

B) சூரியநிலை செயற்கைக்கோள்

C) உளவுச் செயற்கைக்கோள்

D) அனைத்தும்

55) உளவுச் செயற்கைக்கோள் அனுப்பும் தகவலை குறிக்கீடு செய்து சேமிக்கும் நாடு எது?

A) USA

B) UK

C) இந்தியா

D) சீனா

56) உளவுச் செயற்கைக்கோளில் எத்தனை அடிப்படை வகைகள் உள்ளன?

A) 2

B) 3

C) 4

D) 5

57) சரியானதை தேர்க.

A) SINGNIT – Signal Inteligence Satellite

B) SINGNIT – Significance Inteligence Satellite

C) SINGNIT – Significance Interface Satellite

D) SINGNIT – Signal Interface Satellite

58) உளவுச் செயற்கைக்கோளின் எந்தெந்த வகைகளை ஒன்றிணைத்து, அமெரிக்க ஐக்கிய நாட்டின் திறவுகோல் தொடர் போன்ற பெரிய அளவிலான மேடைகளும் பயன்படுத்தப்படுகின்றன?

A) 1 மற்றும் 2

B) 1 மற்றும் 3

C) 2 மற்றும் 4

D) 1 மற்றும் 4

59) அதிக அளவிலான உளவு செயற்கைகோள்களை ஏவிய நாடுகள் எவை?

A) ரஷ்யா–அமெரிக்கா

B) அமெரிக்கா–சீனா

C) அமெரிக்கா–இந்தியா

D) சீனா–ரஷ்யா

60) 1991–க்கு பிறகு சோவியத் கூட்டமைப்பின் பெரும்பான்மையான விண்வெளி அமைப்புகளை தனதாக்கிக் கொண்ட நாடு எது?

A) பிரான்ஸ்

B) இரஷ்யா

C) ருளுயு

D) ஜப்பான்

61) தற்போதுள்ள திறன் மிகுந்த உளவு செயற்கைகோள்களில் பெரும்பான்மையானவை எந்நாட்டைச் சேர்ந்தவை?

A) இரஷ்யா

B) சீனா

C) அமெரிக்கா

D) இந்தியா

62) கூற்று (A): செயற்கைகோள்கள் மூலம் வயல் சார்ந்த தகவல்களான பயிர் அடையாளம், பயிரிடப்பட்ட பரப்பு, பயிர்களின் நிலை அல்லது திறன் போன்ற தகவலைப் பெறலாம்.

காரணம் (R): செயற்கைக்கோள்களின் மறுபார்வையிடுதல் சுழற்சியின் மூலம் ஒரு சிறு வயல் முதல் பெரிய நாடு வரையிலான பரப்பளவிற்கான தகவல்களை சேகரிக்கும் திறன் கொண்டவை.

A) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

B) கூற்று சரி. ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல.

C) கூற்று சரி. ஆனால் காரணம் சரியான விளக்கம்

D) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.

63) கூற்று (A): வனமேலாண்மைக்கு செயற்கைகோள் தகவல்கள் உதவிபுரிந்தன

காரணம் (R): காட்டுத்தீ, காடுகள் அழிப்பு, காடுகள் ஆக்கிரமிப்பு போன்றவை செயற்கைகோள் தகவல் மூலம் எளிதில் பெறப்படுகிறது.

A) கூற்று சரி. ஆனால் காரணம் சரியான விளக்கம்

B) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி.

C) கூற்று சரி. ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல.

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

64) T Gaoten 4 புவி உளவு செயற்கைகோள் பற்றிய தவறான கூற்றைத் தேர்க

A) புவியின் அதிக சக்தி வாய்ந்த புவி உளவு செயற்கைக்கோள்

B) இச்செயற்கைக்கோள் புவி அதிர்வு மற்றும் சூறாவளியால் பாதிக்கப்படும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு உடனடி தகவலை தரவல்லது.

C) இது 2015–ல் ஏவப்பட்டது.

D) இது அயல்நாடுகளின் போர் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை கண்காணிக்க அமெரிக்காவிற்கு உதவியது

65) மண்ணியலில் நுண்ணுணர்வின் பயன்பாடுகள் எவை என்பதை தேர்க.

1. பாறைகள் சார்ந்த வரைபடம் தயார் செய்தல்

2. புவிக்கட்டமைப்பு வரைபடம் தயார் செய்தல்

3. படிகப்படம் வரைதல் மற்றும் அவற்றின் கண்காணிப்பு

4. புவிப்பேரிடர் படம் வரைதல்

A) 1 மற்றும் 2

B) 1,2 மற்றும் 3

C) 2,3 மற்றும் 4

D) அனைத்தும்

66) பேராழியில் நுண்ணுணர்வின் பயன்படுகள் என்ன?

A) கடலின் ஆழத்தை கண்காணித்தல்

B) தாவரப்பச்சையத்தின் அளவை கணித்தல்

C) படிந்துள்ள மண்துகளின் அளவை அறிதல்

D) மேற்கண்ட அனைத்தும்

67) புவியின் எடை குறைந்த செயற்கைக்கோளை ஏவிய அமைப்பு எது? அதன் பெயர் என்ன?

A) ISRO கலாம் சாட்

B) DRDO கலாம் சாட்

C) NASA கலாம் சாட்

D) ESA கலாம் சாட்

68) கலாம் சாட்-ஐ உருவாக்கியவர் யார்

A) NASA

B) ரிஃப்பாத் சரூக்

C) ISRO

D) ஸ்ரீமதி கேசவன்

69) செயற்கைகோளனது ஏவப்பட்ட எத்தனையாது நிமிடத்தில் ஏவூர்தியிலிருந்து பிரிக்கப்பட்டது?

A) 240

B) 125

C) 360

S) 420

70) Cube in Space என்ற போட்டியை நடத்திய அமைப்பு எது?

A) NASA

B) ISRO

C) ESA

D) NASA & I Doodle Learning

71) பொருத்துக.

அ. வேளாண்மை – 1. Gealogy

ஆ. வன மேலாண்மை – 2. Oceanography

இ. மண்ணியல் – 3. Agriculture

ஈ. பேராழியியல் – 4. Forestry

A) 3,4,1,2

B) 4,3,1,2

C) 3,2,1,4

D) 1,4,3,2

72) சில நூறு கிலோ மீட்டர்களுக்கும் மேலிருந்து பெறப்படும் தொலையுணர்வின் பெருபகுதிறன் கொண்ட பதிமங்கள் எத்தனை மீட்டருக்கும் அல்லது அவற்றிற்கும் குறைவான பரப்பளவில் அமைந்துள்ள மிகச்சிறு பொருள்களையும் பதிவு செய்ய வல்லது?

A) 4 மீட்டர்

B) 1 மீட்டர்

C) 3 மீட்டர்

D) 2 மீட்டர்

73) வானிலையியல் பற்றிய கூற்றுகளை ஆய்க.

1. தொலை நுண்ணுணர்வின் ரோடர் அமைப்பு வானிலை சார்ந்த அடிப்படை தகவல்களை பெற உதவுகிறது.

2. தொலையுணர்வானது ஆளில்லா தொலைதொடர்பு செயற்கைகோள்களின் மூலம் நிலம் மற்றும் கடல் சார்ந்த வானிலை தகவல்களை சேகரிக்கிறது.

3. தொலையுணர்வானது, வானிலை மையங்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றத்திற்கும் துரித தகவல் பரப்புதலுக்கும் வானிலை முன்னறிவிப்பிற்கும் பயன்படுகிறது.

A) 1 மட்டும் சரி

B) 1 மற்றும் 2 சரி

C) 1 மற்றும் 3 சரி

D) 1,2 மற்றும் 3 சரி

74) தவறான இணையைத் தேர்க.

A) இடவியல் – Topography

B) நகர திட்டமிடல் – Urabanplanning

C) வானிலையியல் – Aerology

D) புவிப்படவியல் – Cartography

75) இடவியலில், பொதுவான இயற்கை மற்றும் செயற்கை அம்சங்களை கொண்டுள்ள படங்கள் எவை?

A) கோட்டுப்படங்கள்

B) தலப்படங்கள்

C) இயற்கை அமைப்பு வரைபடம்

D) எதுவுமில்லை

76) இரு வேறுபட்ட அளவைகள் கொண்ட இயக்க வரைபடங்களை அடுக்கி ஆய்தல் எதன் மூலம் சாத்தியமாகிறது?

A) தொலை நுண்ணுணர்வு

B) செயற்கை நுண்ணுணர்வு

C) நகர திட்டமிடல்

D) எதுவுமில்லை

77) கடந்த 20 ஆண்டுகளாக நகர திட்டமிடல், வன திட்டமிடல் மற்றும் மேலாண்மைக்கு ஒரு மிகச்சிறந்த சாதனமாக விளங்குவது எது?

A) செயற்கை நுண்ணறிவு

B) கணினி தொழில்நுட்பம்

C) செயற்கைகோள்

D) புவித் தகவல் தொகுப்பு (GIS)

78) புவித் தகவல் தொகுப்பு(GIS) பற்றிய தவறான கூற்றை தேர்க

A) GIS ஆனது கடல், வளிமண்டலம், நிலம் போன்றவற்றின் அனைத்து புவியியல் அம்சங்களையும் உள்ளடக்கியது

B) கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் போன்ற புவித்தகவல் சேகரிப்பு, சேமிப்பு, செயல்பாடு, உற்பத்தி, முன்னிலைப்படுத்துதல் மற்றும் பரவச் செய்தல் போன்ற பணிகளை செய்தலும் GIS ஆகும்.

C) பூமிக்கு அருகிலுள்ள பிற கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றிய தகவலை அளிக்க வல்லது.

D) சமீப காலமாக நகரத்திட்டமிடல், கிராமப்புற வளர்ச்சி திட்ட ஆய்வுக்காக தேவையான தகவலை அளித்து வருகிறது.

79) எந்த கால இடைவெளியில் மூன்றாம் தலைமுறை கணினி பிரசித்திப் பெற்றது?

A) 2010

B) 1972-2010

C) 1964-1971

D) 1940-1956

80) "நுண்செயலி" எந்த தலைமுறைக் கணினியில் பயன்படுத்தப்பட்டது?

A) 4

B) 5

C) 1

D) 2

81) புவித் தகவல் தொகுப்பு எத்தனை பெரும் கூறுகளாக பிரிக்கப்படுகிறது?

A) 3

B) 4

C) 5

D) 6

82) புவித்தகவல் தொகுதி மென்பொருள் இயங்கும் கணினி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) வன்பொருள்

B) மைக்ரோ கணினி

C) மடிக்கணினி

D) சூப்பர் கம்ப்யூட்டர்

83) நெட்வொர்க் கணினியில் அல்லது கிளவுட் அடிப்படையில் இயங்கும் GIS மென்பொருளைக் கொண்ட கணினி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) GIS இணைய சேவை

B) ஆர்க் GIS இணைய சேவை

C) RGIS இணைய சேவை

D) WGIS இணைய சேவை

84) பொருத்தாத விடையைத் தேர்க

A) மதர் போர்டு

B) செயலி

C) பெயிண்ட்

D) அச்சுப்பொறி

85) GIS ஆனது தரவுகளை வினாவி, தொகுக்க, இயக்க மற்றும் காட்சிப்படுத்த உதவுவது எது?

A) செயலி

B) வன்பொருள்

C) மதர்போர்டு

D) மென்பொருள்

86) GIS ஆனது தரவுகளை சேமிக்க எந்த தரவுத் தளத்தைப் பயன்படுத்துகிறது?

A) RDBMS

B) SQL

C) DBMS

D) My SQL

87) பொருந்தாததை தேர்க.

A) ஆர்க் ஜி ஐ எஸ்

B) ஆர்க் வீயுவ் 3.2 கியூ ஜி ஐ எஸ்

C) சாகா ஜி ஐ எஸ்

D) QZSS

88) தரவு என்பது என்ன?

1. கணினியை இயக்கத் தேவைப்படும் ஒருங்கிணைந்த கட்டளைகளின் தொகுப்பு.

2. கணினியால் சேகரிக்கப்படும் தகவல்களே தரவுகள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

89) தரவுகள் எத்தனை வகையாகப் பிரிக்கப்படுகிறது?

A) 4

B) 3

C) 2

D) 5

90) பரப்புகள் தரவுகளை பெரு நிறுவன தரவு மேலாண்மை அமைப்பில் உள்ள மற்ற தரவுகளுடன் ஒருங்கிணைப்பது எது?

A) தொலை நுண்ணுணர்வு

B) புவித் தகவல் தொகுப்பு

C) செயற்கை நுண்ணறிவு

D) அனைத்தும்

91) தகவல் கட்டமைப்பு, திட்டமிடல், வடிவமைத்தல், பொறியியல் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்க பெரிதும் பயன்படுவது எது?

A) ட்ரோன்கள்

B) செயற்கைகோள்

C) தொலைநுண்ணுணர்வு

D) புவித் தகவல் தொழில்நுட்பம்

92) தொழில்நுட்பத் திறன் மிகுந்ததாக விளங்கும் நவீன கருவிகளை ஒருங்கிணைத்து ஆவண வடிவிலுள்ள நன்கு வரையறுக்கப்ட்ட செயல்முறைகளை வர்த்தக யுக்தியில் புகுத்த ஒரு திறவுகோலாக விளங்குவது எது?

A) தரவுகள்

B) செய்முறைகள்

C) மீத்தொகுப்பு

D) எதுவுமில்லை.

93) நன்கு வரையறுக்கப்பட்ட நிலையான செயல்முறைகளை எவ்வாறு அழைக்கிறோம்?

A) மீத்தொகுப்பு
B) தரவுத்தளம்
C) செய்முறைகள்
D) தகவல்கள்

94) புவித் தகவல் தொகுப்பின் செயல்பாட்டு நிலைகள் எத்தனை?
A) 3
B) 2
C) 6
D) 4

95) பொருந்தாததைத் தேர்க
1. தரவு பிடிப்பு – Data Capture
2. தகவல் சேமிப்பு – Data Manipulation
3. விசாரணை மற்றும் ஆய்வு – Query and Analysis
4. தரவு மாற்றியமைப்பு – Data Exchange
A) 1 மற்றும் 2
B) 2 மற்றும் 3
C) 2 மற்றும் 4
D) 4 மற்றும் 1

96) வரைபட தகவல்களை கணினியில் சேமிக்கக்கூடிய எளிமையான புள்ளிகள், கோடுகள் மற்றும் களத்தொகுப்புகளாக மாற்றும் நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்?
A) ஸ்கேன் செய்தல்
B) தரவு பிடிப்பு
C) GNSS
D) இலக்கமாக்கல்

97) இலக்கமாக்கல் எத்தனை முறைகளில் செய்யப்படுகிறது?
A) 2
B) 3
C) 4
D) 5

98) புவித் தகவல் தொகுப்பின் தரவு உள்ளீடு செய்யும் முறைகள் எவை?
1. வான்வெளிப் புகைப்படம், இலக்கமாக்கல்
2. ஸ்கேன் செய்தல், GNSS
A) 1 மட்டும்
B) 2 மட்டும்
C) இரண்டும்
D) எதுவுமில்லை

99) பெருமளவில் பயன்படக்கூடிய தரவு மாதிரிகள் எத்தனை
A) 1
B) 2
C) 3
D) 4

100) எது வரைபடத்தின் தரவுகளை இலக்கமாக மாற்ற பயன்படுத்தப்படும் இனம்சார் தரவு மாதிரிகளின் (Generic Data Model) அடிப்படையில் அமைந்ததாகும்?
A) தரவு மாற்றியமைப்பு
B) தகவல் சேமிப்பு
C) தரவு பிடிப்பு
D) தரவு ஆய்வு

101) தரவுகள் எவ்வாறு தொகுக்கப்பட்ட பின் மின்காந்த நாடா அல்லது மற்ற இலக்க ஊடகங்களில் சேமிக்கப்படுகின்றது?
A) செயல்முறைகள்
B) இலக்கம்
C) தகவல்கள்
D) செய்முறைகள்

102) தரவு மாற்றியமைப்பு (Data Manipulation) என்பதன் பொருள் என்ன?
A) தரவுகளை ஸ்கேன் செய்தல்
B) தரவுகளை இலக்கமாக மாற்றுதல்
C) தரவுகளை ஒருங்கிணைத்தல், அழித்தல் மற்றும் மாற்றியமைத்தல்
D) தரவுகளை அனுப்புதல்

103) எது புவியியல் தரவுகளை கையாளவும், ஆய்வு செய்யவும் GIS–யை கையாளுபவர் பயன்படுத்தும் ஒரு இனம்சார் செயற்பாடு?
A) விருப்பத்தேர்வு
B) ராஸ்டர்
C) வெக்டர்
D) கருவித்தொகுதி

104) எது தொகுதி தரவை மீட்டுப்பெறல், பரப்பு மற்றும் சுற்றளவு காணல், வரைபடங்களை சுருக்கி ஆய்தல், வரைபட இயற்கணித செயல் மற்றும் தரவு மறுவகைப்பாடு போன்றவற்றை செய்ய வல்லது?
A) ராஸ்டர்
B) வெக்டர்
C) கருவித்தொகுதி
D) A மற்றும் B

105) புவி ஆய்வகங்களை மாற்றியமைத்தல், பொருந்தாத பகுதிகளை பொருத்துதல் போன்ற பணிகளின் மூலம் ஒழுங்கற்ற வரைபடங்களை அவற்றின் தொடர்ச்சியான மற்ற வரைபடங்களோடு ஒத்துபோகச் செய்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) தரவு மாற்றியமைப்பு
B) தரவு மறுவகைப்பாடு
C) தரவு சேமிப்பு
D) தரவு படிப்பு

106) புதிதாக உருவாக்கப்பட்ட பகுதிகள் சார்ந்த திட்டமிடல் முறைகளில் எது பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது?
A) தகவல் தொடர்பு

B) தொலை நுண்ணுணர்வு
C) புவித் தகவல் தொடர்பு
D) செயற்கை நுண்ணறிவு

107) பொருந்தாத இணையை தேர்வு செய்க.
A) அமெரிக்க ஐக்கிய நாடு – GIS
B) இரஷ்யா – GLONASS
C) ஐரோப்பிய கூட்டமைப்பு – IRNSS
D) சீனா – BEIDOU

108) தவறை சரிசெய்யும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் விலை மலிவான கிரகிப்பான் மூலம் எத்தனை சென்டிமீட்டர் அளவிலான பொருளையும் துல்லியமாக காட்டும் திறன் பெற்றது GNSS?
A) 4 செ.மீ
B) 1 செ.மீ
C) 2 செ.மீ
D) 3 செ.மீ

109) புவியின் GNSS எந்த நாட்டின் பாதுகாப்புத் துறையில் 1960–ல் ஏவப்பட்ட ட்ரான்சிட் (Transit) ஆகும்?
A) இந்தியா
B) சீனா
C) ரஷ்யா
D) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

110) ட்ரான்சிட் எந்த வினையின் அடிப்படையில் இயங்குகிறது?
A) விளிம்பு விளைவு
B) வெப்ப விளைவு
C) டாப்ளர் விளைவு
D) மின்காந்த விளைவு

111) GNSS செயற்கைகோள் Block IIF–ன் எடை என்ன?
A) 2600 கிலோ கிராம்
B) 3900 கிலோ கிராம்
C) 1000 கிலோ கிராம்
D) 1400 கிலோ கிராம்

112) GNSS செயற்கைகோள்கள் புவியிலிருந்து சுமார் எத்தனை கி.மீ உயரத்தில் சுற்றி வருகின்றன?
A) 2000 கிலோ மீட்டர்
B) 1000 கிலோ மீட்டர்
C) 3000 கிலோ மீட்டர்
D) 4000 கிலோ மீட்டர்

113) GPS குழுமம் எத்தனை செயற்கைகோள்களுடன் முழு புவிப்பரப்பையும் செயல் எல்லையாகக் கொண்டது?
A) 12
B) 21
C) 24
D) 32

114) இரஷ்யாவின் முதன்மை இராணுவ கடற்பயண வலையமைப்பு எது?
A) GPS
B) GNONASS
C) GALILEO
D) BELDOU

115) GNONASS –ன் ஆயுட்காலம் என்ன?
A) 5–7 வருடம்
B) 4–6 வருடம்
C) 5–8 வருடம்
D) 3–7 வருடம்

116) GNONASS எந்த ஆண்டு முதல் முழு புவிப்பரப்பையும் செயல் எல்லையாக கொண்டவாறு மேம்படுத்தப்பட்டது?
A) 2010
B) 2011
C) 2007
D) 2017

117) GPS மற்றும் GNONASS – உடன் இணைந்த இயங்கும் தன்மை கொண்ட GPS எது?
A) BIDOU
B) QZSS
C) IRNSS
D) GALILEO

118) GALILEO அமைப்பில் மொத்தம் எத்தனை செயற்கைகோள்கள் உள்ளன?
A) 24
B) 30
C) 6
D) 32

119) சீனாவின் 2–வது செயற்கைகோள் அமைப்பு எது?
A) BeiDou
B) BeiDou–1
C) BeiDou–2
D) BeiDou–3

120) BeiDou–3 எப்போது அதிகாரப்பூர்வமாக புவிச்சேவையில் இறங்கியது?
A) டிசம்பர் 24, 2004
B) டிசம்பர் 26, 2004
C) டிசம்பர் 27, 2018
D) டிசம்பர் 29, 2018

121) மித உயர் சுற்றுப்பாதையில் பயணிக்கும் திசைக்காட்டியாக விளங்கும் செயற்கைகோள்கள் அமைப்பு எது?
A) BeiDou–1
B) GLONASS
C) GALILEO
D) BeiDou–3

122) ஜப்பான் விண்வெளி ஆய்வுப்பயண முகைமை (QZSS–Japan) எந்தெந்த நாடுகளுக்கு சேவை அளிக்கிறது?
A) ஜப்பான்

winmeen.com

B) ஆசியா

C) நியூசிலாந்து

D) அனைத்தும்

123) QZSS அமைப்பு எத்தகைய சுற்றுப்பாதையில் பயணிக்கும் செயற்கைக்கோள்களைக் கொண்டது?

A) மிக உயர சுற்றுப்பாதை

B) தாழ் உயர சுற்றுப்பாதை

C) மித உயர சுற்றுப்பாதை

D) A மற்றும் B

124) இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தால் (ISRO) நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி பிராந்திய செயற்கைகோள் கடற்பயண அமைப்பு எது ?

A) INS

B) BeiDou

C) IRNSS

D) GLONASS

125) GLONASS எப்பகுதிகளுக்கு சேவை வழங்குகிறது?

A) இந்தியா

B) இந்தியாவைச் சுற்றி 1500 கி.மீ

C) இந்தியாவைச் சுற்றி 2000 கி.மீ

D) A மற்றும் B

126) IRNSS எத்தகையச் சேவைகளை அளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது?

A) வாணிப ரீதியான பயன்பாட்டிற்கு திறன்மிகு இட அமைவை அளிப்பது.

B) இச்சேவையை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட சேவையை வழங்குதல்

C) விரைவு தகவல் சேகரிப்பு

D) அனைத்தும்

127) கடைகள் மற்றும் உணவகங்களின் இருப்பிடங்கள் மற்றும் வழிகளை வரைபடங்கள் மூலம் காண்பிக்கும் பயன்பாட்டிற்கு எது பயன்படுத்தப்படுகிறது?

A) IRNSS

B) BeiDou

C) GALILEO

D) GNSS

128) கூற்று: இரயில்சார் பொருட்களின் துல்லிய இட அமைவை தெரிந்து கொள்வதன் மூலம் இரயில் விபத்துக்களை குறைத்தல், இரயில்பாதை திறனை மேம்படுத்ததுதல் போன்றவற்றை செய்ய இயலும்.

காரணம்: இரயில் போக்குவரத்தில் இரயில் எஞ்சின்கள், இரயில் தளவாடங்கள் உள்ள இடங்கள் ஆகியவை GNSS மூலம் தெரிந்து கொள்ள இயலும்.

A) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

B) கூற்று மட்டும் சரி

C) காரணம் மட்டும் சரி

D) கூற்று சரி. மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

129) கூற்று: சரக்கு கப்பல்களின் இயக்கம், பாதை மற்றும் முற்றத்திலிருந்து அவை உள்ள தூரம் போன்றவற்றை GNSS மூலம் கண்டறியப்படுகிறது.

காரணம்: விமானம் புறப்படும் இடம், பயணிக்கும் பாதை மற்றும் நிலத்தில் இறங்குமிடம் போன்ற தகவல்களை GNSS அளிக்கின்றது.

A) கூற்று மட்டும் சரி

B) காரணம் மட்டும் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

130) தவறானக் கூற்றைத் தேர்க.

1. GNSS தொழில்நுட்பம், நிலச்சமன் எந்திரம் போன்ற இயந்திர கட்டுப்பாடு துறையில் அச்சூழல் குறித்த தகவல்களை அளிக்கிறது.

2. GNSS மூலமான மிகத் துல்லிய உரமிடல் பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி பயன்பாடுகள் செலவினத்தையும் சுற்றுச்சூழல் தாக்கத்தையும் குறைக்கின்றது.

3. GNSS மூலம் பெறப்படும் தகவல்கள் சுரங்கத்தில் உள்ள தாதுவை திறன்பட தோண்டி எடுக்கவும், தேவையற்ற பொருட்களின் நகர்வினை அறியவும் பயன்படுகிறது.

A) 1,2 மற்றும் 3 சரி

B) 1 மற்றும் 2 சரி

C) 1 மற்றும் 3 சரி

D) 1 மட்டும் சரி

131) உலகின் மிக அதிவேக கணினிக்கான போட்டியின் புதிய வெற்றியாளர் எது?

A) சோபியா

B) சம்மிட்

C) சன்வே டை ஹ லைட்

D) எதுவுமில்லை

132) IBM–ன் கூற்றுப்படி, சம்மிட் (Summit)–ன் செயல்திறன் என்ன?

A) 200 பீட்டாப்ளஸ்

B) 200 குவாட்ரில்லியன்/வினாடி

C) A மற்றம் B

D) 87 பீட்டா ப்ளாப்

133) சம்மிட்–ன் ஒவ்வொரு 4,608 முனையங்களும் எத்தனை IBM Power 9 சிப்ஸ்களுடன் 3.1GHZ–இல் இயங்குகிறது?

A) 2

B) 3

C) 4

D) 1

134) பொருத்துக
அ. கணினியின் மைய செயலி – 1. செயற்கை நுண்ணறிவு
ஆ. ரேடியோ சமிக்ஞையை வேறு சமிக்ஞையாக மாற்றுவது – 2. இயற்கைகூறுகள்
இ. பாறைகளின் பொதுவான இயற்பண்பு – 3. அலையாங்கி
ஈ. யோசிக்கும் திறன் கொண்ட கணினி – 4. நுண்ணிய செயலி
A) 4,3,2,1
B) 3,4,2,1
C) 4,3,1,2
D) 3,2,1,4
135) உரை, படம் மற்றும் ஒலி போன்றவற்றை எண்ணிலக்கமாக மாற்றும் முறை எது?
A) எண்ணிலக்க முறையாக்கம்
B) இரும எண் முறையாக்கம்
C) தசம எண் முறையாக்கம்
D) எண்ம எண் முறையாக்கம்
136) கப்பல் விமானம் போன்றவற்றை கண்காணிக்கும் அமைப்பு எது?
A) SONAR
B) LASER
C) RADAR
D) பெரிஸ்கோப்
137) வான்வெளி புகைப்படத்தில் உள்ள பொருட்கள் மற்றும் நிலத்தோற்றங்களின் அளவுகளை மேற்கொள்ளும் படிப்பாய்வு எது?
A) காஸ்மாலஜி
B) போட்டோகிராமேட்ரி
C) ஏரோலஜி
D) ஜியாலஜி
138) நிலையொத்த சுற்றுப்பாதை என்பது என்ன?
A) புவியின் நீள்வட்டப்பாதையில் வலம் வரும் வேறொரு பொருள் சார்ந்தது
B) புவியின் வட்டப்பாதையில் வலம் வரும் வேறொரு பொருள் சார்ந்தது
C) புவியின் துருவப்பாதையில் வலம் வரும் வேறொரு பொருள் சார்ந்தது
D) சந்திரனின் வட்டப்பாதையில் வலம் வரும் வேறொரு பொருள் சார்ந்தது
139) களைக் கொல்லி என்பது என்ன?
A) தேவையற்ற செடிகளை அழிக்கும் இரசாயன உரம்
B) பூச்சிகளை அழிக்கும் இரசாயன உரம்
C) பூஞ்சைகளை அழிக்கும் இரசாயன உரம்
D) பாக்டீரியாக்களை அழிக்கும் இரசாயன உரம்
140) உற்பத்தி அல்லது பிற செயல்முறைகளில் செயல்படும் தானியக்கச் செயல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A) ஆட்டமேட்டிக்
B) ஆட்டோ புரொடக்ஸன்
C) ஆட்டோமேஷன்
D) அனிமேசன்
141) ஒரு புதிய நில அளவாய்வு இடத்திற்கும், ஏற்கனவே உள்ள அளவாய்வு இடத்திற்கும் இடையேயான தூரம் மற்றும் கோணங்களை அமைக்க தகவலை அளிப்பது எது?
A) GNSS
B) GPS
C) GNSS
D) QZSS
142) கூற்று: GNSS மூலம் மிகத்துல்லிய உரமிடல், பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லி பயன்பாட்டு செலவினத்தை குறைக்கலாம்
காரணம் : வேளாண் திட்டமிடல், வேளாண் நில வரைபடம் வரைதல், மண் கூறெடுத்தல், பயிர் மதிப்பீடு செய்தல் போன்றவற்றிற்கான தகவலை புNளுளு வழங்குகிறது
A) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.
B) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம்
கூற்றிற்கான சரியான விளக்கமல்ல
C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி
D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.